Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 128

வெள்ளிக்கிழமை
03 ஏப்ரல் 2026

பங்குனி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

வவுனியா

## மதீனா நகரில் வீடு தீக்கிரை!

பொருள்கள் எரிந்து நாசம்

வவுனியா, ஏப். 3
வவுனியா மதீனாநகர் பகுதியில் நேற்று வீடொன்றில் தீப்பரவல் ஏற்பட்ட நிலையில், பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.
எவரும் இல்லாத நேரம் நேற்று »11



விரிவுரையாளர் தயாளினி கொலை வழக்கு

## மேலதிக தடயப்பொருள்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு!

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி கொலை வழக்கில், பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் மேலும் சில தடயப்பொருள்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார். »11

ஏப்ரல் மாதம்

# 16, 17ஆம் திகதிகளில் வீட்டிலிருந்து வேலை?

பரீட்சார்த்த முயற்சியில் அரசு

**கொழும்பு, ஏப்ரல் 3**

**ஏப்ரல் மாதம் 16, 17ஆம் திகதிகளில் வீட்டிலிருந்து வேலை என்ற நடைமுறையைப் பின்பற்றுவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என்று பிரதமர் ஹரிணியின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.** »11

வாக்குமூலம் பெறுவதற்காக

## விரிவுரையாளரின் மகளிடம் உளவியல் பரிசோதனை!

நீதிமன்றம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் தயாளினி கொலை வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான அவருடைய மகளை உளவியல் பரிசோதனைக்கு »12

உழவியந்திரத்தால் மோதி

## பொலிஸ் அதிகாரி கொலை; சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஏப். 3
கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் பொலிஸ் அதிகாரி ஒருவரை உழவு இயந்திரத்தால் மோதி கொலை செய்ததுடன், மற்றுமொரு பொலிஸ் அதிகாரிக்குப் படுகாயம் ஏற்படுத்திய சம்பவத்துடன் தொடர்பு »11



வடக்கு மாகாண ரீதியில்

## எரிபொருள் சிக்கனம் நடவடிக்கை இறுக்கம்

பிரதம செயலாளர் தலைமையில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 3
நாட்டில் நெருக்கடிகள் தீவிரமாகும் நிலையில், எரிபொருள் மற்றும் மின்சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பில், வடமாகாண பிரதமசெயலா »12

முல்லைத்தீவில்

## சட்டவிரோத மீன்பிடி எட்டுப் பேர் கைது!

முல்லைத்தீவு, ஏப். 3
முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 8 பேர் கடற்படையால் »11



சட்டமா அதிபரின்

## பரிந்துரைகள் வரும்வரை பிள்ளையானுக்கு மறியல்

கொழும்பு, ஏப். 3
கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், சட்டமா அதிபரின் பரிந்துரைகள் வரும் வரை பிள்ளையானை விளக்கமறியலில் வைக்கு »12



மருத்துவர் மீதான அவதூறு

## நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு அழைப்பு

நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 3
தெல்லிப்பழை புற்றுநோய் பிரிவு மருத்துவர் மீதான அவதூறு வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனை நீதிமன் »11

பூச்சந்தி பூராளி

"அப்ப இனி வீட்டிலிருந்து வேலை, பிறகு ஊரடங்கு எண்டு எல்லாமே கோத்தா காலத்துக்கு போறம் கண்டியளோ"

## சிறுமிக்கு பாலியல் தொல்லை பிக்குவுக்கு மறியல் நீடிப்பு!

விரிவு பக்கம்:- 11



## காணி சுவீகரிப்புக்கு எதிராக பொதுமக்கள் நேற்றுப் போர்!

கிளிநொச்சி, ஏப். 3
கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவுக்கு உட்பட்ட ஊர்வணி கன்பற்றுக் கிராமத்தில், இராணுவத் தேவைக்காக 25 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் சுவீகரிக்கப்படவிருந்த நிலையில், மக்களின் எதிர்ப்பையடுத்து அந்த நடவடிக்கை கைவிடப் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4394 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 01 14 70 76 |
| விசேட எழுத்து | R |

| ஹந்தஹஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1461 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 02 12 31 35 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0420 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 9 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2500 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கங்கள் | 11 14 31 51 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6152 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 9 5 0 5 0 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2182 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 09 20 30 35 |
| விசேட எழுத்து | V |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0268 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 24 33 35 |

## விமானக் கொள்வனவில் கையூட்டு

# ஷமீந்திர, பிரியங்காவுக்கு நீதிமன்றால் பிடியாணை!

கொழும்பு, ஏப்.3

**விமானக் கொள்வனவின்போது இலஞ்சம் பெறப்பட்டது என்று கூறப்படும் சம்பவத்தில் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்சவின் மகனான ஷமீந்திர ராஜபக்ச மற்றும் கபில சந்திரசேனவின் மனைவியான பிரியங்கா நியோமாலி விஜேநாயக்க ஆகியோரைக் கைது செய்ய கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுத் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.**

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விடுத்தவேண்டுகோளைப் பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் அஸங்க எஸ். போதரகம், நேற்றுத் தனது தீர்மானத்தை அறிவித்து இந்தப் பிடியாணைகளைப் பிறப்பித்தார். இந்த உத்தரவை இலங்கையின் அனைத்து விமான நிலையங்களுக்கும் அனுப்பவேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டதுடன், சந்தேகநபர்கள் இலங்கைக்கு வந்தால் அவர்களைக் கைதுசெய்து இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவேண்டும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கும் கட்டளையிட்டார். (எ-இ)



## இளநீருக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஏப்.3

தற்போதைய கடும் வெப்பமான காலநிலையால், குடாநாட்டில் செவ்விளநீருக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தென்பகுதியிலிருந்து கடந்த சில நாள்களாக செவ்விளநீரின் வருகை இல்லாமையால், இளநீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன். விலையும் அதிகரித்துள்ளது.

அத்துடன் தற்போதைய வெப்பநிலை அதிகரிப்பால் செவ்விளநீரின் நுகர்வு அதிகரித்துள்ளதால், விற்பனை சூடுபிடித்துள்ளது. ஒரு செவ்விளநீர் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. (க-17)

## எரிபொருள்கள் விற்பனையில் இலக்க நடைமுறை கட்டாயம்

யாழ்ப்பாணம்.ஏப்.3

எரிபொருள்கள் விற்பனையின்போது கியூ.ஆர்.நடைமுறையில் வாகன இலக்கத்தின் இறுதி இலக்கத்தின் ஒற்றை மற்றும் இரட்டை இலக்க நடைமுறையைத் தொடர்ந்து பின்பற்றுமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

எரிபொருள்கள் விநியோகம் சீரான முறையிலும், தட்டுப்பாடின்றியும் நுகர்வோருக்கு விநியோகிக்க ஏதுவாக, எரிபொருள்கள் விற்பனை நிலையம் இந்த நடைமுறை தொடர்ந்து பின்பற்றவேண்டும். இந்த நடைமுறை தொடர்ந்து பின்பற்றப்பட்டால் மட்டுமே எரிபொருள்களுக்கான வரிசையைத் தவிர்க்கமுடியும். அத்துடன் எரிபொருள்கள் விநியோகத்திலும் எவ்வித தடையும் ஏற்படாது. அதேவேளை எரிபொருள்கள் விற்பனை நிலையங்கள் தமது கையிருப்பை உரிய முறையில் அவதானிப்புடன் பேணவேண்டும் என்றும் கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது. (க-17)



## கபில சந்திரசேனவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.3

விமானக்கொள்வனவில் கையூட்டல் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கபில சந்திரசேனவின் பிணை கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சந்தேகநபருக்கு பிணை வழங்குவதற்கு ஏதுவான எவ்விதமான 'விசேட காரணங்களும்' நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை என நீதவான் சுட்டிக்காட்டினார்.

சந்தேகநபரான கபில சந்திரசேனவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். கையூட்டல் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைப் பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் அஸங்க எஸ்.போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (எ-இ)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 3

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் துறைசார் வளவாளர், பயிற்சிநெறியாளர் கட்டுரையாளர்கள் ஆய்வாளர்கள் மற்றும் நடுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தத்தமது பிரதேச இந்துசமய கலாசார அலுவலரிடம் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0860 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 4 1 7 7 3 4 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3126 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 02 06 24 30 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 03 11 35 80 |
| வெற்றி வாரம் | 5287 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0955 |
| வெற்றி இலக்கம் | 02 30 31 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| மிதுனம் | |
| வெற்றி இலக்கம் | 02 13 23 46 |
| சீட்டிழுப்பு வாரம் | 4838 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 32 |
| வெற்றி இலக்கம் | 36 43 54 63 |
| வெற்றி வாரம் | 2302 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 02.04.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 06 17 24 60 |
| வெற்றி வாரம் | 2952 |

## பயணியிடம் மேலதிகக் கட்டணம் நடத்துநருக்கு 2,500 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்ப்பாணம்-கொழும்புத்துறை வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தில், பயணியொருவரிடம் மேலதிகக் கட்டணம் அறவிட்ட நடத்துநருக்கு 2500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடப் போவதில்லை என எழுத்துமூல உறுதிமொழியும் பெறப்பட்டது என்று வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பயணி, வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையின் யாழ். பேருந்து நிலையப் பொறுப்பதிகாரிக்கு உடனடியாக முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின் அடிப்படையில், வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபை விசாரணை முன்னெடுத்தபோது, சம்பந்தப்பட்ட நடத்துநர் குறித்த பயணியிடம் மேலதிகக் கட்டணம் அறவிட்டதை ஒப்புக்கொண்டார்.

அதையடுத்து அவருக்கு அதிகாரசபையால் தண்டம் விதிக்கப்பட்டது. எனவே பொதுமக்கள் இவ்வாறான முறைப்பாடுகளை 0719090900 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு உடனடியாகத் தெரியப்படுத்தமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலை ஒழுக்கம் பேணல் கல்வியமைச்சு சுற்றறிக்கை!

**கொழும்பு, ஏப். 3**

**பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவது தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கை, அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டமட்டப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பரிவேணாதிபதி தேரர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவது தொடர்பாக கல்வி அமைச்சால், இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட, 2016ஏப்ரல்29ஆம்திகதியிடப்பட்ட சுற்றறிக்கையில் உள்ள அறிவுறுத்தல்களுக்குக் மேலதிகமாக, இந்தச் சுற்றறிக்கையில் விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தண்டனையாகவோ அல்லது வேறு எந்தக் காரணத்திற்காகவும் எந்தக் குழந்தையும் உடல்ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ துன்புறுத்தப்படக்கூடாது. எந்த நிலையிலும் எந்தவிதமான உடல்ரீதியான தண்டனையும் விதிக்கப்படக்கூடாது. தவறு செய்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணுவது தொடர்பான விஷயங்களைக் கையாளும்போது, சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மதுவரித் திணைக்களத்துக்கு இலக்கை விஞ்சிய வருவாய்!

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் மதுபானப் போத்தல்களுக்குப் பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மதுவரித் திணைக்களத்தின் வருமானம் கடந்த மூன்று ஆண்டுகளில் 60 சதவீதத்துக்கும் அதிகமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

2025 ஜனவரி 1 முதல் செப்ரெம்பர் 30 வரையான காலப் பகுதியில் 190 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. அரசாங்கம் 177 பில்லியன் ரூபாவையே இலக்காக நிர்ணயித்திருந்தது. தற்போது அந்த இலக்கைவிட 13.4 பில்லியன் ரூபா அதிகமாக ஈட்டப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் 107 சதவீதமாகும். கடந்த 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 18 சதவீத வளர்ச்சியை காட்டுகிறது. வரி ஏய்ப்பைத் தடுக்கும்நோக்கில் 2022 ஜனவரி மாதம் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் ஸ்ரிக்கர் ஒட்டத் தவறியதால் சுமார் 50 சதவீத வருமான இழப்பு ஏற்பட்டது. தற்போது சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு வரிவருமானம் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## தங்கம் விலை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் நேற்றுத் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினத்துடன் ஒப்பிடுகையில், நேற்று ஒரு பவுண் தங்கத்தின் விலை 7000 ரூபாவால் அதிகரித்துள்ளது. சர்வதேசச் சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் நிலவும் கேள்விக்கு ஏற்ப இந்த விலை மாற்றம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்தவகையில் 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 403,000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 370,800 ரூபாவாகவும், விற்பனை செய்யப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வாகன மோசடி மூவர் கைது



கொழும்பு, ஏப்.3

பதிவு உரிமம் இன்றி வாகனங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி ஆவணங்களைத் தயாரித்து வாகன மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீகஹவத்த மற்றும் கந்தானை பொலிஸ் பிரிவுகளில் இந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 3 கார்கள், 2 ஜீப் ரக வாகனங்கள், ஒரு லொறி மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)

## மஹிந்த விஜேசேகர காலமானார்

கொழும்பு, ஏப். 3

தெற்கு அரசியலில் செல்வாக்குமிக்க தலைவர்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சருமான மஹிந்த விஜேசேகர நேற்றுத் தனது 83ஆவது வயதில் காலமானார். அவர் மாத்தறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றியவர். மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு உள்ளிட்ட பல முக்கியமான அமைச்சுகளிலும் பல்வேறு காலகட்டங்களில் பதவிவகித்தார். இடதுசாரி அரசியலில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்த அவர், பின்னர் இலங்கை சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றில் பொறுப்புகளை வகித்தவராவார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## ஆத்தில போற தண்ணிதானே..?

**'சிஸ்டம் சேஞ்' எண்டு சொல்லிக்கொண்டு வந்த திசைகாட்டிக் கோஷ்டியின்ர 'உண்மையான முகம்' இப்பதான் மெல்ல மெல்ல எல்லாருக்கும் தெரியத் தொடங்குது. உந்தத் திசைகாட்டிக்காரர் எப்பிடியெல்லாம் ஊழல் செய்யினம் எண்டத்துக்கு, ஒருபானை சோத்துக்கு ஒரு சோறு பதம் மாதிரி இண்டைக்கு ஒரு சம்பவத்தைப் பாப்பம்.**

**போனவருசக் கடைசியில நாடுமுழுக்க டித்வா புயல் பெரும் ஆட்டம் போட்டு, எல்லா இடமும் கடுஞ்சேதாரம். அரசாங்கமும் உடனடியா இந்தப் பாதிப்பில இருந்து சனம் மீளவேணும் எண்டதுக்காக, கண்ணைமூடிக்கொண்டு நிவாரணங்களைக் குடுத்தது. இதைப்பாவிச்சு, பாதிக்கப்படாத ஆக்களும் அந்தக் காசுகளை எடுத்தவை. வீடுகள் மட்டுமில்லாமல் தொழில் பாதிப்புகளுக்கும் உந்த டித்வா நிவாரணம் குடுபட்டது. டித்வாவில கடுமையாப் பாதிக்கப்பட்ட தொழில்களில கடற்றொழிலும் ஒண்டு. கனபேரின்ர வலையள் கடலோட போட்டுது. இன்னும் சிலரின்ர படகுகளும் கடலில நிண்டதால சேதமாப் போட்டுது. அப்பிடிச் சேதமான படகுகளுக்கு முழுசா சேதமடைஞ்ச படகுகளுக்கு பெரியதொரு தொகையும், பகுதியளவில சேதமடைஞ்ச படகுகளுக்கு குறைஞ்ச தொகையும் நிவாரணமாக் குடுத்தவை. யாழ்ப்பாணம் பருத்தித்துறையில இருக்கிற கொட்டடி கடற்றொழில் சங்கத்தைச் சேர்ந்த ரண்டு படகுகளுக்குத்தான் உந்த டித்வா புயலில சேதம். அதுவும் பகுதியளவிலதானாம்.**

**ஆனால் அந்தச் சங்கக்காரர் 'ஆத்தில போற தண்ணிதானே' எண்டிட்டு 'அண்ணை குடி, தம்பி குடி' எண்டு அரசாங்க நிவாரணத்தை எடுக்கிறதுக்காக சேதவிவரத்தைக்கூடவாக் காட்டியிருக்கினம். ஒரு படகு முழுசாச் சேதமடைஞ்சு பாவிக்கேலாமல் போட்டுது எண்டும், அதைவிட இன்னும் ஏழு படகுகள் பகுதியளவில சேதமடைஞ்சதெண்டும் பதிஞ்சு அதுக்குரிய நிவாரணக்காசையும் எடுத்திருக்கினம். இதில எப்பிடித் திசைகாட்டிக்காரர் ஊழல் செய்தவை எண்டு கேப்பியள். அங்கதான் இருக்குது விசயம். உந்தக் கொட்டடிச் சங்கத்துக்குச் செயலாளரா இருக்கிறவர் தான் கடற்றொழில் அமைச்சரின்ர வடமராட்சிப் பகுதி இணைப்பாளராவும் இருக்கிறாராம். அந்தச் சங்கத்தில முழுசாப் பாதிச்ச படகெண்டு பதிஞ்சது உந்த இணைப்பாளரின்ர படகைத்தானாம். டித்வா புயல் அடிக்கப் போகுதெண்டு முதலே அலேர்ட் வந்ததால, உந்த இணைப்பாளர் தன்ர படகைப் பத்திரமாக் கொண்டந்து கரையில கட்டிப்போட்டார்.அதால டித்வா அடிக்கேக்க அவரின்ர படகு கடல்லையே இல்லையாம். உண்மையாவே அந்தச் சங்கத்துக்கு ஆக்களின்ர ரண்டே ரண்டு படகுகள்தான் பகுதியளவில சேதமானது. ஆனால் இப்ப அந்தச் சங்கத்தின்ர செயலாளராவும், அமைச்சரின்ர இணைப்பாளராவும் இருக்கிறவர் என்ன செய்திருக்கிறார் எண்டால், தன்ர படகு முழுசாச் சேதமெண்டும், தனக்கு வேண்டிய ஆக்களின்ர அஞ்சு படகுகள் பகுதியளவில சேதமெண்டும் கணக்கைக் கூட்டிக் காட்டி நிவாரணத்தை எடுத்திருக்கிறார். இப்பதான் இந்த விசயங்கள் எல்லாம் ஆதாரங்களோட வெளியால வந்திருக்கு. உதை ஒரு யூரியூப்காரர் எப்பிடியோ மணந்து பிடிச்சு, தன்ர யூரியூப்பில போட்டுட்டார். பிறகு அதை பேஸ்புக்கிலையும் போடவெளிக்கிட, சம்பந்தப்பட்ட செயலாளர் காலில விழாத குறையா 'பேஸ்புக்கில போடவேண்டாம்' எண்டு கெஞ்சிக்கூத்தாடி அதைப் போடவிடாமல் நிப்பாட்டிப் போட்டாராம்.**

**இப்பிடிக் கீழ்மட்டங்களில உள்ளவை செய்யிற ஊழல்கள்தான் பிறகு பெரிசாகி மேல்மட்டம் வரைக்கும் பரவும். முளையிலையே இப்பிடியான ஊழல்களை திசைகாட்டிக்காரர் கிள்ளி எறியாட்டி, பிறகுஅவையும் ஊழல் பெருச்சாளியளா மாறி, நாட்டைக் குட்டிச்சுவராக்கிப் போடுவினம். திசைகாட்டிக்காரர் உண்மையான மக்கள் நலனோட ஆட்சிக்கு வந்திருந்தால், இப்பிடியான ஊழல்வாதியளைப் பிடிச்சு விசாரிச்சு,அதுக்குரிய தண்டனையளைக் குடுக்கோணும். இல்லாட்டி காலைச் சுத்தின பாம்பு மாதிரி இந்த ஊழல்கள் கடைசிவரைக்கும் திசைகாட்டி ஆட்சிக்கு கரும்புள்ளியாத்தான் இருக்கும் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும்வாய்ப்புஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கக்கூடும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகமுடியும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும்.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** வீண் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடுவது நல்லது.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்குத் திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும்.

# தொழிற்கல்விப் பிரிவுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2026ஆம் ஆண்டுக்கான தொழிற்கல்விப் பிரிவில் இணைந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

2024/2025 மற்றும் 2025/2026 ஆண்டுகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய அல்லது உயர்தரம் கற்பதற்குத் தகுதியற்ற மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

மலர்வு
30
12
1950



உதிர்வு
31
03
2026

### திருமதி கமலாதேவி பரஞ்சோதி

யாழ். காரைநகர், தங்கோடை, சூரன்வாசத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தை, ஹம்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கமலாதேவி பரஞ்சோதி அவர்கள் 31.03.2026, செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிறாப்பர் முருகேசம்பிள்ளை, மீனாட்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம், பரமேஸ்வரி (பரணி இல்லம்) தம்பதிகளின் அன்பு மருமகளும் பரஞ்சோதி (All Island JP, SANKAR IMPEX - கொழும்பு) அவர்களின் பாசமிகு மனைவியும் உமாசங்கர் (பொறியியலாளர் - கனடா), நாகநந்தினி (ACCA,MBA) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவிதா (கணக்காய்வாளர் - கனடா), கமலரூபன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கல்கியின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்ற குணரத்னம், சந்திரமதி, ஞானாம்பாள், சுந்தராம்பாள், ராஜராஜேஸ்வரி, தேவநாயகி, காலஞ்சென்ற கணேசலிங்கம், இராஜகுலசூரியர் ஆகியோரின் அன்பு சகோதரியும் பத்துமாவதி, பரமராசா, நாகம்மா, சுவர்ணம், இராஜலிங்கம், சிவபாலன், செல்வராஜா, ஈஸ்வரி, தயாபரதேவி, புஷ்பகாந்தி மற்றும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், பாலசுப்பிரமணியம், செல்வராசா, லோகேஸ்வரி, இரத்தினசிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற பாலதுரை, ஜெயந்திராணி (கனடா), E.S.P. நாகரத்தினம் (கஜமுகன் ஹார்ட்வெயர் - யாழ்ப்பாணம்), தங்கமலர் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.04.2026, வெள்ளிக்கிழமை அன்று பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் 04.04.2026, சனிக்கிழமை அன்று யாழ்ப்பாணம் பிரதான வீதி, White House மலர்ச்சாலையில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 05.04.2026, ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் White House மலர்ச்சாலையில் நடைபெற்று, பின்னர் 10.00 மணியளவில் காரைநகர், சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்
83/1 - 1/1, ஹம்டன் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06.
071-2299812


## அலங்கார உற்சவம்

யாழ். ஏப். 3

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் திருவருள் கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 11ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ச)

## மணவாளக்கோல விழா

யாழ்., ஏப்.3

உரும்பிராய் மடத்தடி ஞானவைரவர் ஆலய மணவாளக்கோல விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது காலை 8.30 மணிக்கு 108 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து திருவீதியுலா இடம்பெறும். (க)




## மாபரன் மரணித்து மீட்பளித்த புனித நாள்

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நீதிக்காக மனித விடுதலைக்காக போராடி சித்திரவதைகள், பாடுகள், சிலுவை மரணத்தை ஏற்று தன் உயிரை ஆகுதியாக்கிய தற்கொடையாளனை நினைவுகூர்ந்து அஞ்சலித்து வணங்கி வழிபடும் உன்னத நாளான புனித வெள்ளி இன்றாகும். இந்த விடுதலை வீரன் வேறு யாருமல்ல. அன்பை, மன்னிப்பை, மனிதத்தை ஆயுதமாகக் கொண்டு மறுமலர்ச்சி ஏற்படுத்தி நாம் வாழ வழிகாட்டிய தூயவர் இயேசுக்கிறிஸ்து எனும் காவியநாயகனே. எம் அனைவரின் பாவங்கள், தீயபோக்குகள், வஞ்சகம், பொறாமை, அடக்குமுறைகள், துஷ்பிரயோகங்களுக்காக கல்வாரிக் குன்றில் சிலுவையில் மரணித்த இயேசு செய்த குற்றங்கள் தான் என்ன? சிந்திப்போம். அயலானுக்கு அன்பு காட்டு, எதிரிக்காக மன்றாடு, தீர்ப்பிடாதே, பழிவாங்காதே, நீதிக்காக குரல் கொடுங்கள், சமாதானம் செய்யுங்கள், பகிர்ந்து வாழுங்கள், இறைவனைப் புகழ்ந்து செபியுங்கள் என்று போதித்தது குற்றமா? பிணியாளரை நலமாக்கி, இறந்தோருக்கு உயிர் கொடுத்து, பாவிகளை மன்னித்து, புதுமைகள் புரிந்து, போதனைகளால் மனிதனை நல்வழிப்படுத்தியது குற்றமா? அன்றைய பழமைவாதிகளின் அதிகாரம், ஆட்சி அடக்குமுறைகளுக்கு இயேசு சவாலாகக் காணப்பட்டமையே காரணம். அதற்கு மேலாக மனிதகுலத்தின் பாவ விமோசனத்துக்காகவே கத்தாத செம்மறியாக இயேசு மரணத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்.

நாம் மீட்படைய இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார். அவர் தம் காயங்களால் நாம் நலமடைந்தோம். அவரது இறப்பினால் நாம் வாழ்வு பெற்றுள்ளோம். இயேசுவின் கீழ்ப்படிதலால் நாம் மீட்படைந்தோம். ஆனால் இன்று நாம் இதனை மறந்து தப்பான பாதைகளில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். கொலை, களவு, காமத்திற்கு அடிமையாகி பட்டம், பதவி, பணத்தில் தங்கி வாழுகிறோம். போட்டி, பொறாமை, பழிக்குப்பழி, சூழ்ச்சிவலைகளை விரிக்கின்றோம். மனிதத்தை மிதிக்கின்றோம். எனவே சிலுவையில் அறையப்பட வேண்டியவை எமது துர்க்குணங்களே. நாம் பிறரை மதிக்காதபோதும், அவமானப்படுத்தும்போதும் இயேசுவையே பாடுகளுக்கு உட்படுத்துகின்றோம் என்பதை உணர்ந்துகொள்வோம். அவர் எதற்காக மரணித்தாரோ அதே இலட்சியங்களை மனித விடுதலையை முன்னெடுத்துச் செல்ல ஒன்றுபட்டு உழைப்போம். சிலுவையின் தடம் பற்றி எம் வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தற்காப்பு ஒன்றே தகிப்புக்கான மருந்து!

இலங்கைத் தீவு இப்போது ஒரு பெரும் தணல் காட்டுக்குள் அகப்பட்டுக்கொண்டதைப் போன்ற உணர்வைத் தோற்றுவித்துள்ளது. வழக்கமாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் நிலவும் பருவகால வெப்பம் என்பதையும் கடந்து, இம்முறை சூரியனின் உக்கிரம் 'எச்சரிக்கை' மட்டத்தைத் தாண்டி மக்களின் இயல்பு வாழ்வைச் சுட்டெரிக்கத் தொடங்கியுள்ளது. வானிலை அவதானிப்பு நிலையங்களின் தரவுகளின்படி, ஈரப்பதன் அதிகரிப்பு மற்றும் மேகமூட்டமின்மை காரணமாக நாம் உணரும் வெப்பநிலையானது உண்மையான வெப்பநிலையை விடவும் பல மடங்கு அதிகமாக உள்ளது. சித்திரைப் புத்தாண்டு வரை நீடிக்கப் போகும் இந்தத் தகிப்பு, வெறும் வியர்வையோடு நின்றுவிடாமல் மக்களின் ஆரோக்கியத்துக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு பெருஞ்சவாலாகும்.

இந்த வெப்ப அலை என்பது வெறும் தட்ப வெப்ப மாற்றமல்ல; அது மனித உடலின் நீர்ச்சத்தையும், ஆற்றலையும் உறிஞ்சி 'வெப்ப அதிர்ச்சி'ச்எனும் அபாயகரமான நிலைக்கு இட்டுச்செல்லக்கூடியது. தாகம் எடுக்கும் வரை காத்திருக்காமல் அடிக்கடி நீர் அருந்துவதும், இளநீர் மற்றும் பழச்சாறுகள் மூலம் உடலை குளிர்ச்சியாக வைத்திருப்பதும் இப்போது ஆடம்பரமல்ல, அது உயிர் காக்கும் தேவையாகும். இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து, மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவதுடன், நண்பகல் வேளைகளில் தேவையற்ற வெளிப்பயணங் களைத் தவிர்ப்பதே புத்திசாலித்தனம். குறிப்பாக, திறந்த வெளிகளில் பணியாற்றுவோர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு இது மிக முக்கியமான எச்சரிக்கையாகும்.

இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், உடல் வெப்பத்தைச் சீராக்கும் திறன் குறைவாகக் காணப்படும் சிறுவர்களும் முதியோர்களுமே இந்த வெப்பத்தின் முதல் இலக்குகளாக உள்ளனர். பாடசாலை செல்லும் பிள்ளைகளின் உடல் நலனில் பெற்றோர் கூடுதல் அக்கறை காட்டவேண்டும். அதேபோல், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட முதியோர்களுக்கு இந்த வெப்பம் மூச்சுத்திணறல் அல்லது இதயப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என்பதால், அவர்களைக் காற்றோட்டமான சூழலில் வைத்திருப்பது அவசியமாகும். திடீர் மயக்கம், தலைச்சுற்று அல்லது அதீத வியர்வை தென்பட்டால், அதனைச் சாதாரண சோர்வு என்று எண்ணி அலட்சியப்படுத்தாமல், உடனடியாக மருத்துவ உதவியை நாடுவதே விவேகமானது.

இயற்கையின் சீற்றங்களை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது; ஆனால், எமது விழிப்புணர்வு மற்றும் விவேகமான செயற்பாடுகள் மூலம் அதன் பாதிப்புகளிலிருந்து நம்மைத் தற்காத்துக்கொள்ள முடியும். வரப்போகும் சில வாரங்கள் மிகுந்த சவாலானவை என்பதால், எச்சரிக்கைகளைத் துல்லியமாகப் பின்பற்றி, சுயநலமின்றி அயலவர்களின் நலனிலும் அக்கறை செலுத்துவோம். கொளுத்தும் வெயிலை எமது கூட்டு முயற்சியாலும், முறையான சுகாதாரப் பழக்க வழக்கங்களாலும் பாதுகாப்பாகக் கடப்போம். தற்காப்பு ஒன்றே இந்தத் தகிப்புக்கான தற்போதைய மருந்தாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு**

**பொருள்:** செல்வ நிலையில் உள்ள வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும்; அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.




# மே மாத நடுப்பகுதிவரை எரிபொருள் கையிருப்பு!



கொழும்பு, ஏப். 3

**எதிர்வரும் பண்டிகைக்காலம் முதல் மே மாதம் நடுப்பகுதி வரை நாட்டுக்குத் தேவையான போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார்.**

மார்ச் மாதத்தைப் போலவே ஏப்ரல் மாதத்திலும் திட்டமிட்டபடி கப்பல்கள் வருகை தருவதால், மே மாத நடுப்பகுதி வரை எரிபொருள் விநியோகத்தில் தட்டுப்பாடு இருக்காது.

எரிபொருள் நிலையங்களில் மீண்டும் நீண்ட வரிசைகள் உருவாவதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கும் முறை இன்று முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

பண்டிகைக்காலத்தில் தடையின்றி எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளபோதிலும், தற்போதைய உலகளாவிய சூழலைக் கருத்திற்கொண்டு எரிபொருளை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூட்டுத்தாபனம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-இ)

## ரூபா வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 3

2026ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2026 பெப்ரவரி பிற்பகுதியில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்ட போர்ச் சூழலால் உருவான வெளிநாட்டுத்துறை அழுத்தங்களே, ரூபாவின் பெறுமதி இவ்வாறு வீழ்ச்சியடையக் காரணம் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## குடிதண்ணீர்ப் பற்றாக்குறை; கண்காணிக்க குழு நியமனம்

கொழும்பு, ஏப். 3

நாட்டில் தற்போது நிலவி வரும் கடும் வறண்ட காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைக் கண்காணிக்கவும், நீர் விநியோகத்தை முறையாக நிர்வகிக்கவும் விசேட செயற்பாட்டுக் குழு ஒன்றினைத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை நியமித்துள்ளது.

சபையின் தலைவர் மற்றும் பொது மேலாளரின் நேரடி வழிகாட்டலின்கீழ் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## 175,661 சுற்றுலாவிகள் மார்ச்சில் வருகை

கொழும்பு, ஏப். 3

கடந்த 29 நாள்களில் 175,661 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து 45,650 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர், இது மொத்த எண்ணிக்கையில் 26 வீதமாகும். 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதி வரையிலான மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 732,316 ஆகப் பதிவாகியுள்ளது. (ச-இ)



## தகிக்கும் வெப்பத்தால் பிராணிகளுக்கு ஆபத்து

கொழும்பு, ஏப். 3

தற்போது நிலவும் கடும் வெப்பம், வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளுக்கு உயிராபத்தை ஏற்படுத்தக்கூடும் என கால்நடை மருத்துவர் சோபாத் விஜயரத்ன தெரிவித்துள்ளார். பிரதானமாக கருப்பு நிற நாய்கள் மற்றும் பூனைகளுக்கு இந்தக் கடும் வெப்பம் உயிருக்கு ஆபத்தாகலாம். அதிக வெப்பத்தால் விலங்குகளின் உடல் வெப்பநிலை அதிகரித்து, அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதால் அவை இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். நிறுத்திவைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செல்லப்பிராணிகளை விட்டுச் செல்லவேண்டாம்.

இந்த நாள்களில் நிலவும் கடும் வெப்பம் வெவ்வேறு விலங்குகளை வெவ்வேறு விதமாகப் பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

நாளை
சனிக்கிழமை - பங்குனி 21
04.04.2026
சுபநேரம் : 03.10 - 04.40
ராகுகாலம் : 09.10 - 10.40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 2025 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## வவு. இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி 3 துறைகளில் மாவட்டத்தில் முதலிடம்



நர்மிதா அற்புதராஜா



அல்லிராசா துவாரகா



சஞ்சனா குணலிங்கம்



ஷாருணியா பழனியாண்டி

யாழ்ப்பாணம், ஏப். 3

2025 ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், வவுனியா மாவட்டத்தின் முன்னணி மகளிர் பாடசாலையான இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி விஞ்ஞானம், கணிதம் மற்றும் வர்த்தகம் ஆகிய மூன்று பிரதான துறைகளில் மாவட்ட மட்டத்தில் முத லிடங்களைப் பெற்றுள்ளது. விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய மாணவி சஞ்சனா குணலிங்கம் 3ஏ சித்திகளைப் பெற்று வவுனியா மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இதே பிரிவில் மாணவி ஆன் சுகேதா 3ஏ சித்திகளுடன் மாவட்ட மட்டத்தில் 6 ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். கணித பிரிவில் மாணவி நர்மிதா அற்புத ராஜா, 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். வர்த்தகப் பிரிவில் ஷாருணியா பழனியாண்டி 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், குகனியா ஜெனந்த ராஜா 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும் அஸ்மிதா மெய்யழகன் 3ஏசித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். அதேவேளை வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி மாணவி அல்லிராசா துவாரகா கலைப்பிரிவில் 3 ஏ சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார். (ச-110)

## யா/வட்டு இந்துக்கல்லூரி



டிலக்சி சிவயோகநாதன்
கலைப்பிரிவு
3A



அர்ச்சனா செல்வகுமார்
கலைப்பிரிவு
3A



வணிகப்பிரிவு
தே. நிலோஜன்

**கணிதப்பிரிவு**

டிலக்சி சிவயோகநாதன் ஏ2பி, இலன்ஹீரன் இசையமுதன் ஏ2பி ,முத்துலிங்கம் அகத்தென்றல் ஏ2சி

**விஞ்ஞானப்பிரிவு**

தேவபாலன் ஜங்கரன் பிசிஎஸ்

**வர்த்தகப்பிரிவு**

தேவராசா நிலோஜன் 3ஏ, சுபிதா சின்னராசன் 2பிசி ,கருஞ்சா கருணாகரய்யர் 3பி, சிந்து அனந்தராசா 2பிசி

**கலைப்பிரிவு**

டிலக்சனா சற்குணராசா 3ஏ, அர்ச்சனா செல்வக்குமார் 3ஏ, தவச்செல்வன் தேனுசன் 2ஏபி, விதுசா விஷ்னுமூர்த்தி 2ஏசி, லோயினி மகேஸ்வரன் ஏபிசி, டனுயா செல்வகுமார் 2ஏபி, பிறைநிலா சத்திஜேந்திரா ஏபிசி, கம்சிகா நவரத்தினராசா 2பிசி, கஜபானு குகேந்தி ரகுமார் 2பிசி, அபிஷாஜினி மனோராஜ் ஏபிஎஸ், டிலக்சனா சுரேஷ் 2பிசி

**உயிரியல் தொழில்நுட்பம்**

அன்ரன் ஜோசப்பூராசா பேரெலிலன் 2பிசி, தர்சினி லக்சன் ஏபிசி, சயினா யஜிந்தன் பி2சி

**பொறியியல் தொழில்நுட்பம்**

யோகலிங்கம் கோபி கிருஷ்ணா பி2சி

## பளை மத்திய கல்லூரி

**விஞ்ஞானப்பிரிவு**

சிவகுமார் டிக்சனா ஏ2பி, ஸ்ரீகுகன் ஸ்ரீடிசோபன் 2பிசி, நகுலேஸ்வரன் சங்கவி பி2சி, அந்தோனிப்பிள்ளை அனுசன் 3சி, நிமலரூபன் நிலாஜன் 2சிஎஸ், ரவீந்திரராசா பிருந்துயா 2சிஎஸ், லோகநாதன் இந்துகா 2சிஎஸ், உதயகுமார் நிலானி 2சிஎஸ்

**பௌதீகவியல் விஞ்ஞானம்**

முரளீதரன் கேசிகன் 3ஏ, திருச்செல்வம் உஷாலினி 3எஸ், அன்ரன் கிறிஸ்ரி ஜெசிக்கா சி2எஸ்

**உயிரியல் தொழில்நுட்பம்**

பத்மலேகீரன் சிரேயா 2பிசி, திருச்செல்வம் ஜனுஷா பி2சி, துரைரத்தினம் எழகசினி 3சி, தியுஜினாஸ் காமினிற்றா 2சிஎஸ், சுரேஷ் தமிழ்மதி சி2எஸ்

**வர்த்தகப்பிரிவு**

திருஞானம் ஜினோஜிகா ஏ2சி, ஆலாலசுந்தரம் ஹேசவி பி2சி, உமாசுதன் ஷதுசிகா 2பிசி, கிருஷ்ணானந்தராசா நயிதா 2சிஎஸ், மரியடினேஸ் அப்சலோன் 3சி

**கலைப்பிரிவு**

சந்திரசேகர் ஜ்கனிலா 3ஏ, செல்வராசா டக்ஜிகா 3ஏ, ஜீவரூபன் ரஜீபன் 3ஏ, கனேசலிங்கம் கஜானி 2ஏபி, கனேசராசா தமிழரசி 2ஏபி, சந்திரகுமார் கஜான்சி 2ஏபி, வின்சன் ரொட்ரிகோ ஜன்சிகா 3ஏ, சரவணப்பவன் சஷ்டினா 2ஏபி, ஜெயரங்கன் ஜெயனிலா 2ஏபி, சத்திஜசீலன் வினுசிஜா 2ஏபி, உதயகுமார் ஜதுசன் ஏ2பி, குணபாலசிங்கம் லகீதன் ஏ2பி, அனந்தபவன் ஜசிதா 2ஏபி, அன்சன்நெரியோ அபினாஸ்ஏ2பி

## கொக்குவில் இந்துவில் 169 மாணவர்கள் பல்கலைக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 3

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய 263 மாணவர்களில் 169 மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். இதில் 11 மாணவர்கள் 3ஏ சித்திகளையும், 16 மாணவர்கள் 2ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். (ச-9)

## மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**

சிவபாலா தர்சன் 3ஏ, பாக்கியநாதன் விதுசா 3ஏ, இளையராஜா தனுஷ்சா 3பி, தவத்துரை சாருஜன் 2பிசி, ஜெயகனேஷ் ஜெயப்பிரகாஷ் 2பிசி, தெய்வசீலன் கம்சன் பி2சி, தனபாலன் சஜினியா 3சி, கேதாரநாதன் மிதுசா 2சிஎஸ், சுகந்திரன் மிதுசா 2சிஎஸ் , மரியதாஸ் ஆன் சுரேதா ரோச் 2சிஎஸ், மொகமட் அயாத் பாத்திமா ஸைனா 3சி, சின்னையா ஆன் துசாரி சி2எஸ், கணேசமூர்த்தி கோகிலன் 3எஸ் ,ஜெபகிறீடம் சாம் ஜான்சன் 3எஸ் ,கில்லறி லெஸ்லி பெரேரா ஜோர்ச் ஹென்றி பெரேரா 3எஸ்

**உயிரியல் விஞ்ஞானம்**

அப்துல் ரகுமன் பாத்திமா ரிஷ்னா 3பி, மொகமட் ஜவாஹிர் ஜஸ்லா ஏபிசி, கணக்குமார் சுரேன் பி2சி, அருச்சுனா ராசா நீலன் பி2சி, மொகமாட் ருவைம் மெக்தாப் நவால் 3சி, சிவானந்த குமார் அனுசா 3சி, உதயராஜ் டனுசிகா 2சிஎஸ், கதிர்காமநாதன் தனுசிகா 3சி, தோமஸ் லிங்கன் நிக்கிதா பச்சேக் 2சிஎஸ், அருள்ராஜா அனற் பிரியா 2சிஎஸ் ,அமலஜோதி தருன்ஷிகா குரூஸ் 2சிஎஸ், அப்துல்லா பரியா 2சிஎஸ், மௌஜுட் பாத்திமா அம்னா சி2எஸ், தவகுமார் நயனபிரியா 2சிஎஸ், சித்திக் ரகுமான் பாத்திமா சகீஹா 3எஸ், யூலியஸ் ரோசேல் லோகு 3எஸ், மாட்டின் யதுர்சன் பிகிராடோ சி2எஸ், ஜோசப் இளங்கோ றெபேனிசு எப்சிபா பச்சேக் 3எஸ், ஜெயலிங்கம் ருசானி 3எஸ், பாஸ்கரன் தக்சயா 3எஸ், ராஜ்குமார் ஜெனுசிகன் 3எஸ்

**பௌதீக விஞ்ஞானம்**

நடராஜா அக்சயன் பி2சி, சோதிலிங்கம் பிரனுஜன் 3சி, யூட்ஸ் மரியசீலன் யூட்ஸ் அனஸ் 2சிஎஸ், அலெக்சாண்டர் டதுசிகா சி2எஸ், விக்னேஸ்வரன் சேரலதன் 3எஸ்

ஏனையவை

கிஸ்ணகுமார் ரேசாபிதானன் 3எஸ்

**கலைப்பிரிவு**

ராஜ்குமார் ரொசானி 3ஏ, அற்புதராசா கயல்விழி 2ஏபி , யேகராஜ் நிசோனியா ஏ2பி, சிவநந்தன் அபிசேகா ஏபிசி கில்லறி கன்சிகா ஏபிசி, மனோகரன் கிருரிகா 2பிசி, ஜேக்கப் ப்ரித்தி 2பிசி அன்ரனிஸ் கம்சிகா பிசி எஸ், உதயசூரியன் இசைப்பிரியா பி2சி, சிவகுமார் விதுசிகா 3சி ,மொகமட் ஜாக்கி பாத்திமா சகாமா பி2சி, தயாநிதி யதுர்சினி பிசிஎஸ், திசா அபிசா 2சிஎஸ், செல்வதாஸ் நிம்சி பிசிஎஸ், அருள்சீலன் மேரி ஜாக்குலின் பிசிஎஸ், விஜயகுமார் டனுசியா 2சிஎஸ், புஷ்பராசா சலிஸ்ரா 3சி,குசைன் நசீமா பி2எஸ், அந்தோனி மேரி பிரன்சிகா 2சிஎஸ், முனீஸ்வரன் சதுர்சிகா சி2எஸ், பிரான்சிஸ் வேணு நிதர்சன் 2சிஎஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருதிக்கொடை முகாம்

யாழ்., ஏப். 3

பெரியவெள்ளி நாளை முன்னிட்டு மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஜெஸ்த்தமெனி கொஸ்பெல் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்ட குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று வெள்ளிக்கி ழமை காலை 9 மணி முதல் மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உயிர்காக்கும் குருதிக் கொடைப் பணிக்கு ஒத்து ழைப்பு வழங்கு மாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ச-66)

## மணமகள் தேவை

1. கரவெட்டி, இந்து, கௌரவகுலம் (K), 1974, பூரட்டாதி, A/L Norway Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (57860)
2. மல்லாகம், இந்து, கௌரவகுலம் (K), 1988, திருவாதிரை, A/L France Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (54926)
3. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (K), 1991, பரணி, Engineering, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (53670)
4. உடுப்பிட்டி - நீர்வேலி, இந்து, விஷ்வகுலம், 1991, பரணி, A/L, Supervisor, Germany Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (58017)
5. கொழும்பு, இந்து, விஷ்வகுலம், 1985, திருவாதிரை, MBA, Banker, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (57662)
6. முல்லைத்தீவு, Jaffna, இந்து, விஸ்வகுலம், 1995, ரேவதி, BSc in civil Engineering, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (54530)
7. ஊரெளு, இந்து, கௌரவகுலம் (V), 1990, உத்திரட்டாதி, A/L Own Business, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. (58159)
8. கரவெட்டி - பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், (V), 1991, விசாகம், BSc in civil Engineering, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. (57977)
9. கந்தரோடை - கட்டுவன், இந்து, கௌரவகுலம், (V), 1991, ரோகினி, BSc in Civil Engineering, Project Manager, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. (57742)
10. கரவெட்டி, இந்து, கௌரவகுலம், (V), 1985, விசாகம், BSc, Canada Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. (57569)

S.Sharma J.P CALL: 077 539 3728
www.thaalee.com 076 528 4510

## COOL AIR'S (AIR CONDITION)




9000 Btu முதல் 60000 Btu வரை

Wall Mounted/Floor Standing/Ceiling Mounted/Cassette Type

Hotel / Home/ Wedding Hall /Shop


இதற்குரிய சகலவிதமான குளிரூட்டிகளும்
Inverter Model குளிரூட்டிகள், Non Inverter Model குளிரூட்டிகள்

DAIKIN,MIDEA,GREE,TCL,PANASONIC,CHIGO,HITACHI,SHARP,AUX,TECO,HISENSE,LG
ஆகிய வகைகளிலும் குளிரூட்டிகள் விற்பனைக்கு உண்டு.

STARTED PRICE

| BRAND NAME | BTU | NON INVERTER | INVERTER |
|---|---|---|---|
| DAIKIN | 12000 | 138,000.00 | 177,000.00 |
| TCL | 12000 | 137,500.00 | 150,000.00 |
| MIDEA | 12000 | 157,000.00 | 202,000.00 |
| GREE | 12000 | 139,800.00 | 147,000.00 |

- ☑ 03 METER COPPER PIPE FREE
- ☑ 03 FREE SERVICE
- ☑ 01 YEAR FULL UNIT WARRANTY
- ☑ 05 YEARS COMPRESSOR WARRANTY
- ☑ INSTALLATION FREE
- ☑ OUTDOOR BRACKET FREE



- 1 YEAR COMPREHENSIVE WARRANTY & 5 YEAR COPRESSOR WARRANTY AGAINST MANUFACTURING DEFECTS
- TCL- 02 YEARS WARRANTY FOR INVERTER PCB (9K TO 24K WALL MOUNTED UNITS)

எமது சேவைகள்

- திருத்த வேலைகள்
- குளிரூட்டி பொருத்துதல்
- சேர்விஸ் செய்தல்

COOL AIR'S (AIR CONDITION)
477, K.K.S ROAD, TELLIPPALAI
077 773 8888, 077 217 6413, 021 438 8888

## கிளாரட் சிறுவர் கதம்பம்
## CLARET SIRUVAR KATHAMPAM

மாணவர்களின் உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக வலுவூட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கிளாரட் சிறுவர் கதம்பம் 2007 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

கிளாரட் சிறுவர் கதம்பத்தின் மூலம் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மாணவர்களை ஒன்றிணைத்து, அவர்களின் திறமைகள், நம்பிக்கை மற்றும் ஆளுமையை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் திறன் வினை விழா வருடந்தோறும் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்றுவருவதனை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றோம்.

இந் நிகழ்வானது, மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும், ஒழுக்கம், பொறுப்புணர்வு, ஒற்றுமை ஆகிய பண்புகளை வளர்க்கும் சிறந்த களமாகவும் அமைந்துள்ளது. மேலும் மாணவர்களிடையே நல்லுறவை வளர்த்தல், ஆரோக்கியமான போட்டி உணர்வை உருவாக்குதல் மற்றும் எதிர்காலத்திற்கான தன்னம்பிக்கையை உருவாக்குதல் ஆகியவற்றையும் இந் நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

எனவே, கிளாரட் சிறுவர் கதம்பத்தால் நடாத்தப்படும் தனி மாணவர் மற்றும் குழு மாணவர் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்களது திறமைகளை வெளிப்படுத்தி, சிறந்த பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**போட்டிகள் விபரம்**

தனிநபர் போட்டிகள்

* இசைக்கருவி வாசிப்பு
* கவிதை நயத்தல்
* சித்திரம் வரைதல்
* கட்டுரை எழுதுதல்
* சிறுகதை எழுதுதல்
* குரல் மாற்றிப் பேசுதல்
* நாடக நடிப்பு
* Tik Tok போட்டி

**குழுப் போட்டிகள்**

*குழுப் பாடல் * வினாடி வினா *காட்சிப்படுத்தல் போட்டி

**முக்கிய திகதிகள்**

- போட்டியாளர்கள் 15.04.2026 ஆம் திகதிக்கு முன் தங்களது பெயர் மற்றும் போட்டி விபரங்களை நிகழ்நிலை அல்லது தொலைபேசி அழைப்பு (076-236 5309)ஊடாக பதிவு செய்துகொள்ள வேண்டும்.
- ஆக்கங்களை காணொளி / தபால் மூலம் 29.04.2026 ஆம் திகதிக்கு முன் அனுப்பவேண்டும்
- இறுதி நாள் போட்டிகள் மற்றும் மாணவர் திறன் வினை விழா 09.05.2026 நடைபெறும்.

**போட்டி விதிமுறைகள்**

1. வயது பிரிவு அடிப்படையில் போட்டிகள் இடம்பெறும்
   * முதலாம் பிரிவு (தரம் 6 -8) *இரண்டாம் பிரிவு (தரம் 9 - 11) *மூன்றாம் பிரிவு (தரம் 12 - 13)
2. போட்டிகளின் ஆரம்ப சுற்றில், போட்டியாளர்கள் **"பொறுப்புடமை மிகு எனது ஆளுமை"** எனும் கருப்பொருளில் தங்களது ஆக்கங்களை காணொளி அல்லது தபால் மூலம் அனுப்பவேண்டும். அனுப்பப்படும் படைப்புகள் தெளிவானதும் தரமானதுமானதாக இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு போட்டியிலிருந்தும் சிறந்த 5 போட்டியாளர்கள் அல்லது குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் இடையே நேரடி இறுதி சுற்றுப்போட்டி நடத்தப்படும். இறுதியில் முதல் மூன்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டும்.
4. போட்டியாளர்கள் தங்களது சொந்த படைப்புகளையே சமர்ப்பிக்க வேண்டும் பிறரின் படைப்புகளை நகலெடுத்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. தேவையான உபகரணங்களை போட்டியாளர்களே தயார்படுத்தல் வேண்டும்.
5. நடுவர்களின் தீர்ப்பு இறுதியானதாகும் அதற்கு எதிராக முறையீடு செய்ய இயலாது
6. போட்டிகள் தொடர்பான மேலதிகமான தகவல்கள் தொடர்புகொள்ளும் போது வழங்கப்படும்.

**பரிசில்கள் விபரம்**

முதல் மூன்று இடங்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்
தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்

அல்பேட் ஜோ. அருள்ராஜா CMF,
இயக்குநர்,
கிளாரட் சிறுவர் கதம்பம்.


**மேலதிக தொடர்புகளுக்கு:**
தபால் முகவரி
கிளாரட் சிறுவர் கதம்பம்,
கிளாரட் அகம்,
இல.15, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 076 236 5309

அச்சு ஊடாக அனுசரணை
உதயன்

SALE

மாபெரும் மலிவு விற்பனை

50% வரை விலைக் கழிவு



SHIRTS | TROUSERS | T-SHIRT | DENIM | KIDS WEAR | LADIES WEAR

03 | 04 | 05 | 06
ஏப்ரல் மாதம் (APRIL)


YMCA மண்டபம் யாழ்ப்பாணம்
NO. 109 Kandy Road, Jaffna
காலை 9.30 மணிமுதல் மாலை 8.00 மணி வரை

Signature

077 4766 296
077 1242 619

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் செஞ்சோலைக்கு உலருணவு



கிளிநொச்சி, ஏப்.3
கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையத்துக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒரு தொகுதி உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உலருணவுப்பொருள்களை வழங்கினார். ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப்பொருள்கள் இவ்வாறு வழங்கப்பட்டன. (க-66)

THE ROYAL COLLEGE OF JAFFNA
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
பாடங்களில் குறைந்த மதிப்பெண்களை எடுக்கும் மாணவர்களுக்கு சிறு குழுக்களாக வகுப்புகள்
(ஆண்டு 6 இல் இருந்து A/L கலைப்பிரிவு வரை)
பிரான்பற்று வீதி, சங்கானை.
Tel: 077 675 1649

மணமகள் தேவை
+ யாழ் இந்து 1988 இல் பிறந்த ஜேர்மனியில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
+ யாழ் இந்து 1986 இல் பிறந்த பிரான்ஸ் இல் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:-
076 792 7707
Whatsapp:- 0033 63553 7333
(CS/61121) J-1

வேலையாள் தேவை
கொடிகாமத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ் போடத்தெரிந்த வேலையாள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 077 948 4887
(CS/61128) J-1

### 10 வருட சாதனையை முறியடித்து

# கோலூன்றிப் பாய்தலில் யாழ்.வீராங்கனை சாதனை

யாழ்ப்பாணம், ஏப். 3
தியகம - 2026 ஆசிய இளையோர் தடகள சம்பியன்ஷிப் போட்டிக்கான தகுதிகாண் போட்டிகளில், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வீராங்கனை பரந்தாமன் அபிஷாலினி, பெண்களுக்கான 20 வயதுக்குட்பட்ட கோலூன்றிப் பாய்தலில் புதிய தேசிய சாதனை யைப் படைத்துள்ளார். தியகம மஹிந்த ராஜபக்ச மைதானத்தில் இந்தப் போட்டி அண்மை யில் நடைபெற்றது.

இதில் அபிஷாலினி 3.50 மீற்றர் உயரத்தைத் தாண்டி புதிய இளையோர் தேசிய சாதனையை நிலைநாட்டினார். இதற்கு முன்னர் 2016ஆம் ஆண்டு அனித்தா ஜெகதீஸ்வரனால் நிலைநாட்டப்பட்ட 3.41 மீற்றர் உயரமே சாதனையாக இருந்தது. ஒரு தசாப்த காலத்துக்குப் பிறகு மீண்டும் யாழ்ப்பாண மண்ணைச் சேர்ந்த வீராங்கனை அபிஷாலினி இந்தச் சாதனையை முறியடித்துள்ளார்.

இந்த வெற்றி அவரது பயிற்சியாளர் கனதீபன் கோபாலனின் திறமைக்கு மற்றுமொரு சான்றாகும். (ச)



# INVITATION FOR BIDS

## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.**
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs. and 15:00 hrs.

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 06.04.2026 until 19.04.2026 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 15.04.2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 20.04.2026 | | | | | |
| 1 | PSDG/NP/MU/MEPS/2026/BH/01 | Construction of Bus halt at SR Junction | PSDG Fund | 1.05 | 63 | C9 or above (Building) | 3,000.00 | 07-June-2026 | 15,800.00 | 05-July-2026 |
| 2 | PSDG/NP/MU/MEPS/2026/OS/01 | Construction of Shopping Complex at Karumpullijan | PSDG Fund | 3.38 | 63 | C9 or above (Building) | 3,000.00 | 07-June-2026 | 50,700.00 | 05-July-2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, e.mail: psmanthaieast@gmail.com) from 9:00 hrs. to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Manthai East Pandiyankulam on or before 10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.**
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.**
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Manthai East Pradeshiya Sabha,**
**Pandiyankulam,**
**Naddankandal. 03.04.2026**

(CR/47334) J-1

தந்தை செல்வாவின்

# 128ஆவது ஜனன தினம் யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3
இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின், 128ஆவது ஜனனதின நினைவுகூறல் நிகழ்வு, யாழில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கட்சியின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்.மாநகர முதல்வர் திருமதி வி.மதிவதனி, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு, மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்

**கழிவகற்றல் சேவைக்கு 16 உழவு இயந்திரங்களை சாரதி மற்றும் தொழிலாளர்களுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2026**

01. மாநகர சபை எல்லைக்குள் தரம் பிரிக்கப்பட்ட சமையலறைக் கழிவுகளை உழவு இயந்திரங்கள் மூலம் அகற்றுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
02. வாகனம் பயணிக்கின்ற தூரம் GPS மானி வாசிப்பின் அடிப்படையில் மாத்திரமே கணிக்கப்பட்டு வாடகைக்கட்டணமானது தீர்மானிக்கப்படும்.

பணிக்கப்படும் வட்டாரத்திலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள் உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி, ஏனையவை) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றும் சேவைக்கு 8 மாத காலத்திற்கு (01.05.2026 - 31.12.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநரிடமிருந்து (உழவு இயந்திரம், சாரதி, தொழிலாளர் உட்பட) யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் கேள்விப் படிவங்களை 03.04.2026 - 19.04.2026 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய். 1000.00 + Vat 18% பணமாகச் செலுத்தி விண்ணப்பங்களை பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தொலைபேசி இல. 0212222275, 0212217691 மின்னஞ்சல் முகவரி - mcjaffnamailv@yahoo.com மூலம் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 20.04.2026 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாநகரசபைஅலுவ் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் / பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கழிவகற்றல் சேவைக்கு உழவு இயந்திரங்களை சாரதி மற்றும் தொழிலாளர்களுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2026" என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும்.


கேள்விகள் 20.04.2026 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(CS/47335) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 . 11 . 1935 | 02 . 04 . 2026 |

### சின்னத்தம்பி கந்தையா (ஆசாரி)

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா அவர்கள் நேற்று (02.04.2026) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனும், கந்தையா - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், வாமதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவகுமார் (சிவா), மங்கையர்கரசி (சுவிஸ்), நிர்மலா (ஜேர்மனி), பாசமலர் (கனடா), உதயகுமார், காலஞ்சென்ற ஜெயக்குமார், இராசகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (சுவிஸ்), சுதாகர் (ஜேர்மனி), லிங்கேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, கிருஸ்ணமூர்த்தி மற்றும், சறோஜினிதேவி, புவனேந்திரன், பத்மாவதி, தேவராசா (அம்மான்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சதுஜா (சுவிஸ்) மற்றும் விதுசன், நதிகா (ஜேர்மனி), சதுஜன் (சுவிஸ்), கிருஸ்ணவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.**
**077 651 3783, 077 546 5105**

(CS/61129) J-1

# வாராஹி அம்பாளின் வருடாந்தத் திருவிழா

*யாழ்ப்பாணம், ஏப்.3*

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சமும் இடம்பெறும். வைரவர் பொங்கல் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும்.

(க)

## 31ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**புனிதவதி லோகநாதன்**
(சின்னக்கட்டி அக்கா)

எமது தெய்வத்தின் பண்பிற்கு,
பாசத்திற்கு, சிரிப்பிற்கு
ஏங்குகிறேன் அம்மா....
முடியவில்லை ....
அந்தியேட்டி நாளில்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
ஓம் சாந்தி !

பிரிவால் துயருறும்
S.பானு, பிள்ளைகள்
கெருடாவில்,
தொண்டைமானாறு.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.05.1950 | 04.03.2026 |

(CS/61130) J-1

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 . 12 . 1958 | 29 . 03 . 2026 |

### கந்தையா தனஞ்சயன்

யாழ் திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும், அவுஸ்ரேலியா, மெல்பேர்ன் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனஞ்சயன் (இராசா) அவர்கள் கடந்த (29.03.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - யோகம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் - கனகம்மா தம்பதியரின் பாசமிக்க மருமகனும், இராதிகாவின் அன்புக் கணவரும், அபர்ணிகா, திவ்வியா, நிவேதிதா ஆகியோரின் பாசமிக்க தந்தையும், பவானி, நித்தியானந்தன், ஜெயச்சந்திரன், பகீரதன், பூரணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மோகனதாஸ், சுகிர்தா, ரேவதி, வரலட்சுமி, முருகானந்தம், பரமேந்திரன், அரவிந்தன், இரச்சனா, கற்பகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நரேந்திரன், ஆரணி, அருண், ஷாலினி, ஐஸ்வரியா, துஷாயினி, கிரிஷாந்த், ஆகியோரின் அருமை மாமாவும், மயூரன், வாணி, கிஷானி, தர்ஷன், ஹினா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அனந்தசாயி, கீர்த்திகா ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும், டிலன், ஐஷா, றியா, மீனா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.04.2026) திங்கட்கிழமை St Albans, 2 Arthur St (Cr Victoria Cres) Funeral Time : 11.00 - 14.00, Cremation Time - 14.30. நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**இராதிகா- +61 470 123 274, பவானி - +61 410 009 802**
**அரவிந்தன் - +61 414 141 058**
**பூரணி - +61 423 438 144**
**ஸ்ரீநந்தகுமார் - +61 415 405 361**

(CS/61117) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெரும்போக அறுவடைக்கான எரிபொருள்கள் விநியோகம்!

கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக அறுவடைக்குத் தேவையான எரிபொருள்களைத் தடையின்றி விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக எரிபொருளுக்கான பற்றுச்சீட்டை, விவசாயிகள் உரிய காலத்தில் பயன்படுத்தவேண்டும் என்று மாவட்டச் செயலர் சு.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான முதலாவது விவசாயக்குழுக் கூட்டம், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, அரசாங்கத்தால் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாய நடவடிக்கைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்லும் வகையில், கமநல ஆணையாளர் நாயகத்தால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எனவே துறைசார்ந்த திணைக்களங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் விசேட கவனம் செலுத்தி, விவசாய நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்- என்றார்.

கூட்டத்தில் சிறுபோக விவசாயச் செய்கைக்கான நீர்ப்பாசனத் தேவைப்பாடு, நீரின் சிக்கனம், விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம், விவசாய அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உப உணவு உற்பத்தித் திட்டம், உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் மற்றும் வனவிலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான 'பாதுகாப்புத்துப் பாக்கித் ' திட்டம், தென்னை மரங்களில் ஏற்படும் வெள்ளைஈ தாக்கம், பார்த்தீனியக் களைக்கட்டுப்பாடு, புதிய திராட்சை இனங்களை அறிமுகம் செய்தல், கால்நடைகள், வீதிகளில் நெல் உலர்த்துவதால் ஏற்படும் வீதி விபத்துகளை தவிர்ப்பதற்கான மாற்று நடைமுறைகள் உள்ளிட்ட விவசாயத்துறைசார்ந்த விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. (க-113)

# பூநகரிப் பிரதேசசபைக்குட்பட்ட இரு வீதிகள் மக்கள் பாவனைக்கு



கிளிநொச்சி,ஏப்.3

பூநகரிப் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்ட இரண்டு வீதிகள், நேற்றுமுன்தினம் முதல் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டன. தலா பத்து இலட்சம் ரூபா நிதியில், குமுழமுனை உள்ளக வீதி, இலங்கை வங்கி வீதி ஆகியன புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தன.

இந்த வீதிகளை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மக்கள் பாவனைக்குத் திறந்துவைத்தார். தவிசாளர் சிறீரஞ்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பூநகரிப் பிரதேசசபையின் உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)


## சாரதி தேவை

A-D அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி தேவை.
நீர்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0777 890 398

(CS 31550)A



## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

நடாத்தும்

"வெப்பக் காலநிலை"

## விழிப்புணர்வு கருத்தரங்கு

தற்பொழுது நிலவும் வெப்பக் காலநிலைப் பாதிப்புக்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

கருத்துரை வழங்குவோர்



பேராசிரியர்
நாகமுத்து பிரதீபராஜா அவர்கள்
(புவியியல்துறை)
பீடாதிபதி கலைபீடம்
யாழ். பல்கலைகழகம்



வைத்தியகலாநிதி
தயானந்தன் துஷியந்தன் அவர்கள்
(M.B.B.S, D.M.F)
பிரதேச வைத்திய அதிகாரி

04.04.2026 சனிக்கிழமை
மாலை 4.00 மணி
வண்ணை ஸ்ரீகாமாட்சி திருமண மண்டபம்

இந்நிகழ்விற்கு வருகைதந்து பயன் பெற்று நம்மை நாமே பாதுகாப்போம்.

ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

நிர்வாகத்தினர்



## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 | 30 |
| 02 | 03 |
| 1934 | 2026 |

## திருமதி பூமகள் நடராஜா

யாழ். நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் (கொட்டடி), கொழும்பு (வெள்ளவத்தை) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமகள் நடராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்கள் 30.03.2026 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா, மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமசாமிப்பிள்ளை, அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராஜா (KRN) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற ஸ்கந்தராஜா (சிறி-கொழும்பு), சாந்தினி (இங்கிலாந்து), ராகினி (இங்கிலாந்து), வரதராஜா (அமெரிக்கா), மாலினி (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேன்மொழி (பபா-கொழும்பு), இராஜகுலசிங்கம் (இங்கிலாந்து), ஜெயசீலன் (இங்கிலாந்து), சுகந்தி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம். காலஞ்சென்ற தங்கம், லட்சுமி, மீனாட்சி, நாகம்மா, சொர்ணம்மா, காலஞ்சென்ற இராமநாதன், காலஞ்சென்ற பொன்னம்பலம், ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரேஸ்வரி, காலஞ்சென்ற தியாகராஜா, காலஞ்சென்ற செல்வராஜா, இரத்தினராஜா, காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (மணியாள்), காலஞ்சென்ற நாகேஸ்வரி (கிச்சுமணி), காலஞ்சென்ற பரமேஸ்வரி (அத்தாச்சி), காலஞ்சென்ற சிவபாதம், காலஞ்சென்ற தியாகராஜா, காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற சந்திரன், மகேஸ்வரநாதன், சந்திரலீலா, செல்வராணி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரசாத், பிரியா, பிருத்துவி, ரமணன், ரம்யா, ராகுல், ரஜீவன், பிரதீபன், ஜனனி, சந்தியா, ரீனா, அவனிஷ், ஆருஷ், நீற்றி, நிஷ், அனிட்டா, செந்தூரன், லாயினி, மித்ரா, அபிஷேக், ரொமில் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், டிலன், தேவ், அஷ்வின், அஞ்சலி, ரயான், ரெயா, கிரன், ரயன், ஏய்வா, வேய்ரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 05.04.2026 ஞாயிற்றுக் கிழமையன்று காலை 9.00 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பிற்பகல் 12.30 மணியளவில் இறுதிக் கிரியை நடைபெற்றுப், பின்னர் பிற்பகல் 3.00 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்- 0094112361655



## யா/காரைநகர் இந்துக்கல்லூரி, பழைய மாணவர் சங்கம்
## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

தலைவர் - திரு அ.ஜெகதீஸ்வரன் (அதிபர்)
இடம் - நடராசா ஞாபகார்த்த மண்டபம்.
காலம் - 19.04.2026 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி

நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் - சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், செயற்பாட்டறிக்கை
4. பொருளாளர் - கணக்கறிக்கை (2022-2026)
5. புதிய நிர்வாகத் தெரிவு
6. சபையோர் கருத்துரை
7. வேறு விடயங்கள்
8. நன்றியுரை

பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
யா/காரைநகர் இந்துக்கல்லூரி
காரைநகர்.

(CS 31548) A



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுபோக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

## விலைமனுக்கோரல்

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு
குமுதினி பயணிகள் படகு இயந்திர திருத்தம்
விலைமனு இலக்கம் : RDA/EE/JAF//RPL – 002 / 2026/01

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுவில் குமுதினி பயணிகள் படகு இயந்திர திருத்தம் செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலை மனுவின் சுருக்கம் கீழே இணைக்கப்பட்டுள்ளது.


| | |
|---|---|
| கொள்முதல் நடைமுறை | தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல் |
| மனு ஆவணம் வழங்கல் | 06.04.2026 முதல் 22.04.2026 வரை |
| மனு ஆவணக் கட்டணம் | ஆனைத்து வட்வரி (VAT) உள்ளடங்கலாக ரூபா 2,000.00 ஆகும். |
| முன்மனுக் கூட்டம் நடைபெறும் திகதி, நேரம், மற்றும் இடம். | 10.04.2026 ஆம் திகதி பி.ப 2.00மணிக்கு நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 657, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். |
| மனு ஒப்படைக்கும் கடைசித் திகதி மற்றும் இடம் | 23.04.2026 ஆம் திகதி பி.ப 2.00மணிக்கு நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 657, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். |
| மனுப்பிணைத் தொகை | ரூபா 70,000.00 |
| அடிப்படைத் தகமை | துனிப்பட்ட / கம்பனி வியாபாரப் பதிவுச் சான்றிதழ். |

முழுமையான விபரங்களடங்கிய " விலைமனுக்கோரலினை" 06.04.2026 ஆம் திகதி முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் WWW.rda.gov.lk இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

தலைவர்.
அலுவலக கொள்முதல் குழு. நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
657, கடற்கரை வீதி, குருநகர்.
தொலைபேசி: 021 222 2590

(CR/47337) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## மதினா...

மாலை அந்த வீட்டின் உட்பகுதி திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இதையடுத்து, மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டு, சில மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மின்னொழுக்குக் காரணமாக தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் நிலையில் அது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-110)

## மேலதிக...

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகசித்தமருத்துவத் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் தயாளினி படுகொலை செய்யப்பட்டு, தனங்களப்புப் பகுதியில் இருந்து உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக சிரேஸ்ட விரிவுரையாளரின் மருமகன் முதலாவது சந்தேகநபராகவும், மகள் இரண்டாவது சந்தேகநபராகவும் பெயரிடப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷான் ஆகியோரும், விரிவுரையாளரின் மகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சமந்த அத்துக்கோரள உள்ளிட்ட மூன்று சட்டத்தரணிகளும் முன்னிலையாகினார்கள். முதலாவது சந்தேகநபரான விரிவுரையாளரின் மருமகன் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

விரிவுரையாளரின் மகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சமந்த அத்துக்கோரள நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார். இதன்போது அவர் தெரிவித்த விடயங்களின் சாராம்சமாவது:-

முதலாவது சந்தேகநபரும் இரண்டாம் சந்தேகநபரும் சட்டரீதியாகத் திருமணம் செய்தபோதும், முதலாவது சந்தேகநபரின் உடல் உள துன்புறுத்தல் காரணமாக இரண்டாம் சந்தேகநபர் மணநீக்கம் செய்யும் முடிவை எடுத்து அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டார். விரிவுரையாளரின் மருமகனுக்கு அவரது நடத்தை தொடர்பாக ஏற்கனவே வழக்குகள் உள்ளன. சில பிணை நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவர் வெளியில் விடப்பட்டிருந்தார்.

பாதிக்கப்பட்டவர் வாழும் கிராம அலுவலர் பிரிவு எல்லைக்குள் பிரவேசிக்கக்கூடாது என ஒரு கட்டளையும், விரிவுரையாளரின் மகள் கல்வி கற்கும் பாடசாலை மற்றும் அவர் செல்லும் எந்த இடத்துக்கும் செல்லக்கூடாது என்ற கட்டளையும் ஏற்கனவே மன்றால் பிறப்பிக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் மீறியே விரிவுரையாளரின் மருமகன் செயற்பட்டுள்ளார்.

இந்தக் கொலை இடம்பெற்ற மறுநாளே, இரண்டாவது சந்தேகநபரான விரிவுரையாளரின் மகள், உயிரிழந்தவரின் காலை அமுத்திப் பிடித்திருக்க, தான் கழுத்தை நெரித்ததாக விரிவுரையாளரின் மருமகன் வாக்குமூலம் அளித்துள்ளார் என ஊடகங்களும், சமூக ஊடகங்களும் செய்தியிட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவர் வழங்கியதாகக் கூறப்படும் வாக்குமூலமானது, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொலிஸாரின் 'பி' அறிக்கையில் இடம்பெற வாய்ப்பில்லை. அவ்வாறிருக்கையில், பொறுப்பற்ற சில ஊடகங்களும், சமூக ஊடகங்களும் இவ்வாறான தகவல்களை வெளியிடுவது பொலிஸாரின் முறையான புலன் விசாரணைகளைக் குழப்புவதுடன், சமூகத்தில் தவறான கருத்துகளைத் தோற்றுவிக்கும். இது நீதிமன்ற அவமதிப்புச் செயலாகும். கொலை வழக்கு தொடர்பாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் வரை எவரும் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாது. அத்துடன் இரண்டாவது சந்தேகநபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் தவறான விடயங்கள் பரப்பப்பட்டுள்ளன என்றவாறாகச் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், சந்தேகநபர்களுக்காக நான் முன்னிலையாகவில்லை. மாறாக, பாதிக்கப்பட்ட தரப்புக்காகவே முன்னிலையாகியுள்ளேன். இந்த விடயம் நீதிமன்றத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், சில ஊடகங்கள் நான் சந்தேகநபர்களுக்காக முன்னிலையாகினேன் என்று தவறான தகவல்களைப் பரப்பியுள்ளன. இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு பொதுவான எச்சரிக்கையொன்றை வெளியிட வேண்டும் என்று கோரினார்.

அத்துடன், உயிரிழந்த விரிவுரையாளரின் வீட்டில் எடுத்த தடயப் பொருள்கள் உள்ளிட்ட சிலவற்றை நீதிமன்றம் ஊடாக நாம் பொலிஸாரிடம் சமர்ப்பிக்கின்றோம். உயிரிழந்த விரிவுரையாளர் கைப்பட எழுதிய சில ஆவணங்களும், உயிரிழந்தவர் கடைசி நாள் வரை பயன்படுத்திய திறன்பேசியும் உள்ளன. அதனையும் புலன் விசாரணைக்கு உட்படுத்தினால் மேலதிக தகவல்கள் கிடைக்கக்கூடும். புலன் விசாரணை தங்கு தடையின்றி நடக்க பொலிஸாரின் விசாரணைக்கு அவைதேவையோ இல்லையோ, அவற்றை நாம் ஒப்படைக்கின்றோம்.

இறந்த விரிவுரையாளர் கடந்த காலங்களில் செய்த முறைப்பாடு சம்பந்தமாகவும் சந்தேக நபர்கள் தொடர்பில் நிலுவையில் உள்ள வழக்குகள் சம்பந்தமாகவும் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் என்றவாறாகத் தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இந்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான், சந்தேகநபர்கள் இருவரையும் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-26)

## 16,17ஆம்...

அரச சேவையை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவின் மூன்றாவது கூட்டம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இணையவழி ஊடாக நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே, ஏப்ரல் மாதம் 16, 17ஆம் திகதிகளில் வீட்டிலிருந்து வேலை என்ற நடைமுறையைப் பின்பற்றுவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ள விடயம் தெரிவிக்கப்பட்டது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, அரச ஊழியர்கள் இணையவழி ஊடாகக் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான வழிகாட்டல்களை அண்மைக்காலமாகத் தயாரித்துவந்தது. இந்த நிலையில், பொது நிர்வாக அமைச்சின் உடன்பாட்டுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும், அதன்படி 2026 ஏப்ரல் 20ஆம் திகதிக்கு முன்னர் அந்த வழிகாட்டல்களின்படி செயற்படுவதற்குத் தேவையான சுற்றுநிருபங்களை வெளியிடுவதற்கும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது. இதன் ஓர் அம்சமாகவே, ஏப்ரல் மாதம் 16, 17ஆம் திகதிகளில் வீட்டிலிருந்து வேலை என்ற நடைமுறையைப் பின்பற்றுவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அரச சேவையை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவின் அடுத்தகட்டக் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## சட்டவிரோத...

கைது செய்யப்பட்டனர். முல்லைத்தீவு செம்மலை கடற்கரைப் பகுதியில் உளவியந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட வேளையிலேயே சந்தேகநபர்கள் எட்டுப்பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதையடுத்து, அவர்கள் அனைவரும் சான்றுப் பொருள்கள் சகிதம் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களிடம் தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசாரவிகரன் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார். இதுதொடர்பில் முல்லைத்தீவு மீனவர்கள் காலவரையறையற்ற போராட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான பின்னணியிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-19)

## நாடாளுமன்ற...

றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தன்னைத் தொந்தரவு செய்யும் வகையிலும், அவதூறுகளைப் பரப்பும் நோக்கிலும் செய்திகளையும், பரப்புரைகளையும் மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும், இன்னும் சிலருக்கும் எதிராக தெல்லிப்பழைப் புற்றுநோய் பிரிவு மருத்துவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் உசைன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சார்பில் எவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், அந்த வழக்கு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் சட்டத்தரணிகள் ஊடாக முன்னிலையாகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும், ஏனைய குற்றஞ்சாட்டப்பட்ட தரப்புக்கும் நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

வழக்குத் தொடுநரின் சார்பில் சிரேஸ்ட சட்டத்தரணி லக்சான் டயஸ், சட்டத்தரணி கனகலிங்கம் கிஷோபனா ஆகியோர் முன்னிலையானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## சிறுமிக்கு...

யாழ்ப்பாணம் - நாவற்குழி விகாரையில் தண்ணீர் எடுக்கச்சென்ற சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்று குற்றம்சாட்டப்பட்ட பௌத்த பிக்குவை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

நாவற்குழி விகாரைக்கு அருகில் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர், அண்மையில் வீட்டுப் பாவனைக்காக விகாரைக்குக் குடிதண்ணீர் எடுக்கச் சென்றுள்ளார். இதன்போது, அங்கு நின்ற பௌத்த பிக்கு அந்தச் சிறுமியை பாலியல் ரீதியில் சீண்டினார் என முறைப்பாடு வழங்கப்பட்டது.

இந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே, சந்தேகநபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-26)

## காணி...

பட்டது. குறித்த பகுதியில் கடந்த 17 வருடங்களாக இராணுவம் நிலைகொண்டுள்ள நிலையில், இராணுவத்தின் நான்காவது பட்டாலியன் மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணிக்கான நிரந்தர முகாம் அமைக்கும் நோக்கிலேயே மேற்படி காணிகளை அபகரிக்கத் திட்டமிடப்பட்டது. இந்த நடவடிக்கைகளைக் கண்டித்தே, நேற்றுக் காலை பொதுமக்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, குறித்த காணி அளவீட்டுப் பணிகள் தற்காலிகமாக் கைவிடப்பட்டன. (அ-ம-26-113)

## பொலிஸ்...

டையபிரதான சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் - கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மீது, மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் உழவியந்திரத்தால் மோதியிருந்தனர். இதன்போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மற்றையவர் படுகாயம் அடைந்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில், உழவு இயந்திரத்தின் உரிமையாளரும், உழவியந்திரச் சாரதிக்கு உதவியாகச் சென்ற நபரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், பிரதான சந்தேகநபர் தேடப்பட்டு வந்தார். இவ்வாறான நிலையிலேயே, சட்டத்தரணி ஊடாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் அவர் நேற்று முன்னிலையானார். இதனையடுத்து அடையாள அணிவகுப்பை நடத்துமாறு பணித்த நீதிவான், சந்தேகநபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-26)


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# சுகாதார மருத்துவ அதிகாரிகள் 9 பேருக்கு யாழில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.3
சுகாதார அமைச்சின் வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில், யாழ்.மாவட்டத்தில் 9 சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி க.மகேந்திரன், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி டி.எஸ்.ஜெபரட்ணம், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி த. சுசிதரன், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி அ.ஜெயகுமரன், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி க.இந்திரமோகன், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி வை. யதுநந்தன், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி சு.மோகனகுமார், சங்கானை மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரியாகவும், பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி த.துஸ்யந்தன், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியாகவும் இடமாற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்களை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கடந்த 20ஆம் திகதி வழங்கியுள்ளார். (க)

# சாவகச்சேரி இந்துக் கல்லூரி 20 மாணவர்களுக்கு 3 'ஏ'

யாழ்ப்பாணம், ஏப். 3
2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 20 மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். அத்துடன் 17 மாணவர்கள் 2ஏபி சித்திகளை பெற்றுள்ளனர். அதேவேளை இந்தப் பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 71.19% சதவீதமானோர் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். (ச-9)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடம் காரைநகர் வீதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- யாழ் மானிப்பாய் வீதி ஆறுகால்மடச் சந்தி 1ம் ஒழுங்கை.
- யாழ் மாநகர சபை எல்லைக்குள்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 12 இலட்சம்.
  பின்பகுதி 10 இலட்சம்.
- 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ் பஸ்நிலையம் 1 1/2 km தூரம்.
- ஒட்டுமடச் சந்தி 300m.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- காரைநகர் வீதியிலிருந்து இரண்டாம் காணி.

**தொடர்பு:- 076 990 3039 077 468 3354**

(CS 31547) A


# பரிந்துரைகள்...

மாறு உத்தரவிடப்பட்டுள்ளது. துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஓராண்டாக தடுத்து வைக்கப்பட்டிருந்த, கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் நேற்று மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.
சட்டமருத்துவ அதிகாரியின் பரிசோதனைகளைத் தொடர்ந்து, கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையிலேயே, அவரை சட்டமா அதிபரின் பரிந்துரைகள் வரும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம)

# விரிவுரையாளரின்...

உட்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே, துறைசார் அதிகாரிகளிடம் முற்படுத்தி இரண்டாவது சந்தேகநபர் வாக்குமூலம் அளிப்பதற்கான மனநிலையில் உள்ளாரா என்பதை உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ-ம-26)

# எரிபொருள்...

ளர் தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்வேறு முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.
நாட்டில் தற்போது நிலவிவரும் எரிபொருள் மற்றும் மின்சக்தி நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு, அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றின் தவிசாளர்கள் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.
இந்தக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களாவன,

**உள்ளூராட்சி மன்றங்களுக்கான அறிவுறுத்தல்**

**வீதி விளக்குகள்:**
உள்ளூராட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டிலுள்ள வீதி விளக்குகளை அவசியமற்ற நேரங்களில் அணைத்து வைப்பதற்கும், தேவையுள்ள இடங்களில் மட்டும் உரிய நேரத்தில் ஒளிரவிடுவதையும் அணைப்பதையும் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**விளம்பரப் பலகைகள்**
வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும் மின்சார விளம்பரத் திரைகள் இரவு வேளைகளில் நிறுத்தப்பட வேண்டும்.

**அரச அலுவலகங்களுக்கான கட்டுப்பாடுகள்**

**வளிச்சீராக்கிப் பயன்பாடு**
அனைத்து அரச அலுவலகங்களிலும் காலை 10 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மாத்திரமே வழிச்சீராக்கிகளைப் பயன்படுத்த வேண்டும். அலுவலகங்களில் மின்சார விளக்குகள் மற்றும் மின் விசிறிகளைத் தேவையற்ற போது அணைத்து வைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும் மாதாந்த மின் கட்டணப் பட்டியலில் மின் அலகுகளைக் குறைப்பதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**எரிபொருள் சிக்கனம்**
அரச வாகனங்களுக்கான எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
இந்தச் சிக்கன நடவடிக்கைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக, ஒவ்வொரு அலுவலகத்திலும் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (அ-ம)


## TECHNA Technical Institute

தொழினுட்பப்பிரிவு 077 170 3549

A/L 2025 உயர்தரப் பரீட்சையில் மாவட்ட நிலையில்
இரு பிரிவுகளிலும் எமது மாணவர்களே முதலிடம்!

உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

தே. கிஷானி
2A B - DISTRICK RANK - 01

பொறியியல் தொழினுட்பவியல்

செ. வினுசிகன்
2A B - DISTRICK RANK - 01

A/L 2025 REPEAT BATCH
ஆரம்பம் 04/04/2026, 8.00AM

பொறியியல் தொழினுட்பவியல்

சி. விதுசன் (முல்லை)
2A B - DISTRICK RANK - 01

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| பி. கிபிசாலினி | 2A B | 02 | தி. யானுஷா (கிளி) | B 2C | 02 |
| சி. தர்சிகா | 2A B | 04 | க. ருபிஷானி | 3C | 32 |
| ஜெ. தனுறா | A B C | 05 | சி. கோகிசன் | 3C | 33 |
| நி. புவிதா | A B C | 06 | றோ. ஜிதுஷா | 2C S | 34 |
| அ. பேரெழிலன் | 2B C | 08 | கி. சந்தியா | C 2S | 58 |
| த. லக்சன் | A B C | 10 | அ. ஹர்சிகா | C 2S | 63 |
| த. ஷார்மினி | B 2C | 17 | ச. நிலாந்தன் (கிளி) | 2C S | 05 |
| தி. ஜஸ்மிகா | 2B C | 18 | | | |
| ந. பானுசன் | 2C S | 29 | | | |

செயன்முறை, கருத்தரங்களில் பங்குபற்றியோர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப.ஸ்ரேயா (கிளி) | 2B C | 01 | து. ஈழகாசினி (கிளி) | 3C | 09 |
| சி. மதுசாயினி | B C S | 38 | கோ. அவிஷா | 2C S | 48 |

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை | பெயர் | பெறுபேறு | மாவட்ட நிலை |
|---|---|---|---|---|---|
| அ. அன்புசெல்வன் | 2A B | 03 | ஜ.ஜனிதரன் | 2B C | 27 |
| ஜோ. இளங்கீரன் (முல்லை) | 2B C | 03 | பி. ஜெயபிரவீன் | B 2C | 30 |
| மு. முகாத் (மன்னார்) | 2C S | 03 | சூ. சுலக்சி | B 2C | 32 |
| பி. சர்மிலன் (கிளி) | C 2S | 04 | ற.தமிழரசன் | 3C | 36 |
| சி. தஜீசன் | A 2B | 05 | கு. பிரியந்தி | 3C | 39 |
| அ. சஜீந்த் | A 2B | 06 | ரா. ஷாகித் | 2C S | 49 |
| வி. தனுஜா | A B C | 07 | ற. ஜானுயா | B C S | 50 |
| சி. சந்தோஸ் | A 2B | 09 | ச. சங்கீதா | 3C | 51 |
| ச. பகிஸ்கர் | 2B C | 12 | ச. தருஷ் | 2C S | 53 |
| சி. தமிழமுகன் | A B C | 13 | வி. சரணியா | 3C | 54 |
| சு. வைஸ்ணவி | B 2C | 26 | ரா. சன்சிதா | C 2S | 70 |

செயன்முறை, கருத்தரங்களில் பங்குபற்றியோர்
சி. வைசிகன் 2C S, 57 போ. இந்துசன் 3C, 62

A/L 2028 BATCH நடைபெறுகின்றன

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org